
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1269

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே


**நீரை.மகேந்திரன்**

169

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த `மிசா' மு.கேசவன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# `மிசா' மு.கேசவன் மறுப்புக்கு மறுப்புரைத்தார்- மனமருள் போக்கினர்!

ஓவியம் : ரவி பேலட்



*1961*-ஆம் ஆண்டு, கழகத்தின் கொள்கை பிரச்சாரகர்கள் குறித்து, பேரறிஞர் அண்ணா, தம்பிக்கு எழுதிய கடிதம், "கொள்கை அறிந்தவர்கள், விளக்கும் ஆற்றல் பெற்றவர்கள், வரலாறுதனைப் படித்து, வகையான அறிவு கொண்டவர்கள், ஆராய்ந்து பார்த்ததனால் அரும் உண்மை கண்டவர்கள், அவரெல்லாம் செல்கின்றார், அறிவுடன் ஆர்வம் காட்டி, கொள்கை பரப்புதற்கு! அணி என்ன, அழகென்ன, ஆதார வகையென்ன, நடையின் மிடுக்கென்ன என்றெல்லாம் பேசி, நாட்டினர் பாராட்டுகின்றார். இலட்சியத்தை அறிவித்து ஆதரவு திரட்ட, அரும்பணி ஆற்றினோரில், ஒரு சிலரின் பெயர் மட்டும் கூறுகிறேன். என் குறையால் விடுபட்டுப்போன பெயர் கூட்டி, பட்டியலைச் சரியாக்கும் பொறுப்பு உனக்குத் தம்பி!" என்று அவர் பட்டியலிட்ட மூத்த முன்னோடிகளின் வரிசையில், தமிழ்நாட்டின் வட எல்லையில் இருந்து இடம்பெற்றவர், மீஞ்சூர் கேசவன்.

கழகத்தின் ஆரம்ப காலகட்டத்தில், அன்றைய ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டம், இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில், பொன்னேரி, மீஞ்சூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் தீவிரமாக இயங்கிய திராவிட இயக்கத் தலைவர், தளகர்த்தர். பொன்னேரி வட்டத்தில் கழகக் கொடியை முதன்முதலில் பறக்க விட்டவர், கேசவன். கழகத்தின் ஆரம்ப காலப் பொதுக்கூட்ட மேடைகளில், 'பேச்சும் நாடகமும்' மீஞ்சூர் கேசவன் பெயரைச் சொல்கின்றன.

கழகத்தின் கொள்கைகளைக் கடைக்கோடி கிராமப்புற மக்களிடம் கொண்டுசேர்ப்பதில் முக்கிய பங்காற்றினார். சென்னைக்கு மிக அருகில் இருந்ததால், கேசவன் அவர்கள், அப்போதைய தலைமைக் கழகமான அறிவகத்திலும் அன்றைய சென்னை முன்னோடிகளுடன் இணைந்துசெயல்பட்டவர்.

கழகத்தின் தொடக்ககாலங்களில் பேரறிஞர் அண்ணா அவர்கள், மாநாடுகள், பொதுக்கூட்டங்களைத் திட்டமிடும் போதெல்லாம், பரப்புரைக்குச் செல்லும் சொற்பொழிவாளர்களின் பட்டியலை, 'தம்பிக்கு அண்ணாவின் கடிதங்'களில் எழுதுவார். அண்ணா வெளியிட்ட அதிகார பூர்வப் பட்டியல்களில் கலைஞர், நாவலர், மதியழகன் வரிசையில் தவறாமல் இடம்பெற்ற பெயர், மீஞ்சூர் கேசவன்.

கட்சியின் அனைத்துப் போராட்டங்களின் போதும் மாவட்ட அளவில் கைதான அல்லது களத்தில் நின்ற முக்கியப் பொறுப்பாளர்களில் ஒருவராக மீஞ்சூர் கேசவன் திகழ்ந்தார். கழக வரலாற்றில் மிக முக்கியமான போராட்டங்களான கல்லக்குடிப் போராட்டம் (1953), கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் (1957) விலைவாசி உயர்வுப் போராட்டம் (1962) மற்றும் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் (1965) ஆகியவற்றின்போது, ஒருங்கிணைந்த சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்ட எல்லைகளில் போராட்டங்களை முன்னெடுத்தவர்களில் இவரும் ஒருவர்.

**காஞ்சிபுரம் பிரதிநிதி**

1959-ஆம் ஆண்டில், காஞ்சிபுரத்தில் கழகத்தின் சார்பில், சி.வி.எம்.அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விலைவாசி உயர்வு எதிர்ப்புக் கமிட்டி கூட்டத்தில், காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்தின் பிரதிநிதியாக இடம்பெற்றதை, ம.பொ.சிவஞானம் அவர்களின் 'செங்கோல்' இதழ் பதிவுசெய்துள்ளது.

1964-ஆம் ஆண்டு, இந்தித் திணிப்புக்கு எதிரான சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1.2.64 முதல் 14.2.64 வரையிலான மறியல் போராட்டத்துக்குப் பொறுப்பேற்றவர்களில் ஒருவர். பி.சிவசங்கரன் எம்.பி., சி.வி.எம்.அண்ணாமலை, மீஞ்சூர் கேசவன், கே.டி.எஸ்.மணி, பூவிருந்தவல்லி சின்னசாமி, மா.பொ.வேதாசலம் ஆகியோர் பெயர்களைத் தலைமைக் கழக அறிவிப்பாக வெளியிட்டிருந்தார், அண்ணா. 8.2.64-இல் மீஞ்சூர் கேசவன், பொன்னேரி செல்வன், அப்துல்லா, மீஞ்சூர் ஏ.ஆர்.சண்முகம், ஏ.ஆர்.பலராமன் ஆகியோர் மறியல் செய்து கைதாயினர் என 'தி.மு.கழக வரலாறு' நூலில் பதிவுசெய்துள்ளார், கழக முன்னோடி சிட்டிபாபு.

'மிசா' நெருக்கடிக் காலத்தில் கைது செய்யப்பட்டு, ஓராண்டு சிறைத்தண்டனை அனுபவித்த உடன்பிறப்புகளில் ஒருவர். இன்றைய கழத் தலைவர் அவர்களோடு சிறையில் அடைக்கப்பட்டிருந்த கேசவன் அவர்கள், தலைவர் மகன் என அவர் குறிவைத்து தாக்கப்பட்டபோது, தடுத்த உடன்பிறப்புகளில் ஒருவர். கொள்கைப் பற்றும் தீவிரமும் கொண்ட கேசவன் அவர்கள், பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர். வயது மூப்பு காரணமாக 2000 ஆண்டுக்குப் பின்னர் தீவிர பணிகளைக் குறைத்துக் கொண்டு, இளைஞர்களுக்கு வழி விட்டவர், கொரோனா நெருக்கடிக் காலத்தில், தனது இயக்கத்தை நிறுத்திக்கொண்டார். அவரது நினைவுக்கும் உழைப்புக்கும், மீஞ்சூர் கழகத்தினர் ஒவ்வோர் ஆண்டும் நினைவேந்தல் மரியாதை செய்கின்றனர்.

பேரறிஞர் அண்ணா, மீஞ்சூர் கேசவனைக் குறிப்பிட்டு எழுதும் ஒரு கட்டுரையில் சொல்வதுபோல, அரும்பணியாற்றி என்னை அகமகிழவைப்பதற்கும், தகும் செயலாற்றி நமது தாய்நாட்டை மீட்பதற்கும், இத்துணை வீரர் இங்கு திரண்டெழுந்து நிற்குங்காலை, என்னையும் பிரிந்து, இந்த ஏற்புடைக் கழகம் விட்டேகி, கொள்கையும் துறந்து, கோலோர் குதூகலம் கொள்ளும் வண்ணம், கடுமொழி பேசுவோரின் போக்கினால், இனிக் கவலை கொள்ளேன்; கழகமே நமக்குக் காப்பு; நாமதன் காவலர்காண்; நமக்கினி உள்ள வேலை, மிகுதியாய் வளர்ந்தது; நாம் அதற்கேற்ப, தொண்டு ஆற்றியே நிற்போம்; தம்பி! எலும்பும் தோலுமாக நாம் இளைத்திடுவதேனும் உழைத்திட அஞ்சோம்; இஃது உறுதி, உறுதி என்றே எழுப்புக முழக்கம்; இகல் வெல்வோம், இன்னுயிர் போவதேனும்" என்று வாழ்ந்து மறைந்த கேசவன் அவர்கள் வழியில் நாமும் உழைத்திட அஞ்சோம்.

...துடிக்கும்

> **'மிசா' மு.கேசவன் நினைவுக்கும் உழைப்புக்கும், மீஞ்சூர் கழகத்தினர் ஒவ்வோர் ஆண்டும் நினைவேந்தல் மரியாதை செய்கின்றனர்.**

## நிஜ நாயகனும் நிழல் நாயகனும்!

'தி.மு.க.வின் இந்தித் திணிப்பு எதிர்ப்பை, ஏனைய இந்தியா எப்படி தாமதமாகப் புரிந்துகொண்டதோ, தி.மு.க.வின் இடஒதுக்கீட்டு ஆதரவை ஏனைய இந்தியா எப்படித் தாமதமாகப் புரிந்துகொண்டதோ, தி.மு.க.வின் மாநில உரிமைக்கான குரலை, ஏனைய இந்தியா எப்படி தாமதமாகப் புரிந்துகொண்டதோ, அதேபோல் தி.மு.க.வின் 'நீட்' எதிர்ப்பை, இப்போது ஏனைய இந்தியா தாமதமாகப் புரிந்து கொண்டிருக்கிறது' என முகநூலில் கருத்துப் பகிர்ந்துள்ளார், முனைவர் குமரவேல் என்பவர். அவரது பதிவிலிருந்து...

"முதன்முதலில் 'நீட்' தேர்வை காங்கிரஸ் கொண்டுவந்தபோது, "இது கிராமப்புற மற்றும் ஏழை மாணவர்களின் மருத்துவக் கனவைப் பாதிக்கும்" என்று கலைஞர் கண்டித்ததால், " 'நீட்' நடத்துவதும் நடத்தாததும் மாநிலங்களின் உரிமை" என்று பணிந்து, சட்டத்தை மாற்றியது காங்கிரஸ். பின்னர், ஜெயலலிதா அப்பல்லோவில் இருந்தபோது, 'நீட்'டை ஏற்றுக் கையெழுத்திட்டார், அப்போது அ.தி.மு.க.வில் உளவாளியாக இருந்த ஆர்.எஸ்.எஸ். கைக்கூலி மாஃபா பாண்டியராஜன்.

ஜல்லிக்கட்டுப் போராட்டம் வந்தபோது, "நீட்' அநீதி எனப் போராட்டத்தை ஆரம்பித்தார், ஸ்டாலின். ஆனால், ஜல்லிக்கட்டுப் போராட்டத்தைத் திசைதிருப்ப இப்படிச் செய்கிறார் என வழக்கம்போல், இட்டுக்கட்டினார்கள். மாடு பிடிப்பதில் ஜெயித்துவிட்டு, படிப்பதில் தோற்றோம். பா.ஜ.க.வுடன் கூட்டணியில் இருந்த அ.தி.மு.க., பா.ஜ.க.வை 'நீட்'டை ஒழிக்கச் சொல்லி நிர்பந்திக்கவே இல்லை. இதனிடையே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வேறு வாங்கியது, பா.ஜ.க.

சட்டப்படி, அதை முற்றிலும் ஒழிப்பதற்காக ஏ.கே.ராஜன் கமிட்டி அமைத்து, அதை ஒழிக்கச் சட்டமும் இயற்றி அனுப்பியது, தி.மு.க. அரசு. அதுதான் உதயநிதி சொன்ன ரகசியம். அதுதான் மந்திரம். ஒரு ஜனநாயக நாட்டில் இந்த ரகசியம் வேலை செய்யும். ஆனால், பா.ஜ.க.வின் இந்தியாவில்தான் ஜனநாயகமே இல்லையே! ஆனால், இப்போதும் பாருங்கள், " 'நீட்'டை ஒழிக்கிறேன்னு தி.மு.க. சொல்லுச்சே... ரகசியம் இருக்குன்னு உதயநிதி சொன்னாரே... ஒழிச்சுச்சா.. என தி.மு.க.வைக் கிண்டல் செய்பவர்கள், சட்டத்தை வளைத்த பா.ஜ.க.வை கேள்வி கேட்பதில்லை.

தமிழ்நாடு மட்டுமே எதிர்த்த ஒரு அநீதியை, இன்று இந்தியாவே எதிர்க்கும்போது உடன் நிற்க, தமிழ்நாட்டுக்கு இன்று தெம்பில்லை. அதன் முதுகெலும்பு சினிமா மோக ஆசிட்டில் கரைந்துவிட்டது.

தமிழ்நாட்டுக்கு வந்த ஆபத்தை மட்டுமல்ல, வரப்போகும் ஆபத்தைக்கூட எதிர்க்கத்தான் நம்மை 'நிஜ ஹீரோ'வாக வைத்திருந்தது, தி.மு.க. இதோ உங்கள் 'நிழல் ஹீரோ' நம்மை பரிதாபமான 'நிஜக் கோமாளி'யாக்கி இருக்கிறார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ப்ளாஷ்பேக்



ச.இமாம்சா



### இளைஞர் அணியின் இதயத்துடன்...

2016-ஆம் ஆண்டில், எஸ்.கொடிக்குளம் பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டதை அடுத்து, இளைஞர் அணியின் இதயமாம் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களை, அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். உடன், பேரூர்க் கழகச் செயலாளர் இருந்தார். தலைவரை முதல்முறையாகச் சந்தித்த அந்தத் தருணம், இளைஞர் அணியில் ஆற்றலுடன் செயல்பட ஊக்கம் தந்தது. காலம் மாறலாம் காட்சி மாறலாம். ஆனால், தி.மு.கழகம் என்றும் எங்கள் குடும்பம்.

**– ச.இமாம்சா, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர், கூமாப்பட்டி – வத்திராயிருப்பு ஒன்றியம், விருதுநகர் தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 23 வயதில், சென்னை மேயர்!

1960-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி மேயராகக் கழகத்தின் சார்பில் அப்துல் காதர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநகர் மன்ற விதிகளின்படி அந்த ஆண்டுக்கு, முஸ்லிம் ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்போது, மாமன்ற உறுப்பினராக ஆறு முஸ்லிம்கள் இடம்பெற்றிருந்தனர். தி.மு.கழகம் சார்பில் போட்டியிட்ட அப்துல்காதர், 52 வாக்குகள் பெற்றார். காங்கிரஸ் சார்பில் வெற்றிபெற்ற சுல்தான் முகைதீன், 43 வாக்குகள் பெற்றார். மேயராகத் தேர்வான அப்துல் காதருக்கு, அப்போது வயது 23.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900